அரசு ஒரு ஒப்பந்தக்காரருக்கு ஒரு வேலையை விடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால், அந்த வேலை முடிகின்ற வரைக்கும் அந்த ஒப்பந்தக்காரருக்கு வேறு வேலை கொடுக்கக்கூடாது என்ற நிலைமையை உருவாக்கியிருக்கிறோம். மேலும், வேலையில்லாமல் இருக்கும் பொறியியல் பட்டதாரிகள் கூட்டுறவு சங்கத்தை அமைத்து, அவர்கள் தங்களுக்கு அந்த வேலைவாய்ப்புகளை அளிக்க வேண்டுமென்று கேட்டு வருகிற காரணத்தால் அவர்களுக்கும் தருகின்ற வகையில் இந்தச் சூழ்நிலை மாற்றியமைக்கப்பட்டு வருகிறது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை விரிவாக்க அலுவலர்களாக கால்நடை மருத்துவர்களை நியமிக்கும் திட்டம்.

*வினா எண் 360—திரு. ந. குலசேகரபாண்டியன், திரு. இரா. தாமரைக்கனி மற்றும் திரு. எஸ். ரெத்தினராஜ் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் (E. O. A. H.) கால்நடை விரிவாக்க அலுவலர்களாக கால்நடை மருத்துவர்களை நியமனம் செய்ய செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் நியமனம் செய்யப்படும் ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) ஆம்.

(ஆ) ஊராட்சி ஒன்றியங்களில் (E. O. A. H.) கால்நடை விரிவாக்க அலுவலர்களாக கால்நடை மருத்துவர்களை நியமனம் செய்ய அரசு ஆணை எண் (நிலை) 2319, வேளாண்மை, நாள் 19—10—1981-ல் ஆணை பிறப்பித்துள்ளது. இவ்வாணை உயர்நீதி மன்ற தடை உத்தரவினால் செயல் படுத்தப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

திரு. ந. குலசேகரபாண்டியன் : பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்பு இன்றைக்கு கிராமப்புறங்களில் இன்றியமையாததாக இருக்கிறது என்பதை உணர்ந்து, ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை விரிவாக்க அலுவலர்களாக கால்நடை மருத்துவர்களை நியமிக்க அரசு உத்தரவிட்டபோதிலும், கோர்ட் தடைஉத்தரவு பிறப்பித்து இருப்பதால், அது சரிவர நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. ஆகவே, அந்தத் தடையை நீக்க அரசு சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ? அந்தத் தடையை விரைவில் நீக்கி, அந்த ஆணையை விரைவில் அமல்படுத்த அரசு முன்வருமா ?

1982 மார்ச் 4]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, நீதி மன்றத்தால் விதிக்கப்பட்டுள்ள தற்காலிக தடையை நீக்கக் கோரி அரசு சார்பில் மனு செய்துள்ளோம். இன்னும் தடை நீக்கப்படவில்லை. அந்த மனு மீதான விசாரணை 25—3—1982-ல் நடக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, அரசு எடுத்த முடிவு பிடிக்கவில்லை என்றால் தமிழக முதலமைச்சர் அவர்களிடத்திலோ அல்லது சமூக நல அமைச்சரிடத்திலோ கால்நடை ஆய்வாளர்கள் பேசி இருக்க வேண்டும். அதைவிடுத்து, முக்காடு ஊர்வலம், பிணை ஊர்வலம் போன்று அரசு அதிகாரிகள் என்பதற்கே அவமானச் சின்னமாக இருக்கும், போராட்டம் நடத்திய அவர்களுக்குப் பாடம் கற்பிக்கும் வகையில் கால்நடை ஆய்வாளர் களின் சங்கத்தின் பதிவு உரிமையை ரத்து செய்ய அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு போட்ட உத்தரவுக்கு எதிராக கால்நடை ஆய்வாளர்கள் முக்காடு ஊர்வலம் நடத்தியதற்காக அவர்கள் மீது முறைப்படி என்ன நடவடிக்கைகளைக் கையாளவேண்டுமோ அதையெல்லாம் அரசு மேற்கொண்டு இருக்கிறது. அதற்காக அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

திரு. எஸ். ரெத்தினராஜ் : தலைவரவர்களே, ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் தனித்தனியாக கால்நடை மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா? ஒவ்வொரு ஒன்றியத்திலும் எத்தனை கால்நடை மருத்துவர்கள் இருக்கிறார்கள் ? இரண்டு, மூன்று ஒன்றியங்களுக்கு என்று இல்லாமல் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் தனித்தனியாக மருத்துவர்களை நியமனம் செய்யும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர்களே, ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் எத்தனை கால்நடை மருத்துவர்கள் இருக்கிறார்கள் என்ற விவரம் தற்போது என்னிடம் இல்லை. ஆனால் மொத்தமாக 1,243 கால்நடை மருத்துவர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு கால்நடை மருத்துவ மனைக்கும் கால்நடை மருத்துவரை போட்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப்பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]